புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# சாதி ஒழிப்புப் படிநிலையில் தமிழ்நாடும் தந்தை பெரியாரும்

**முனைவர் கி.பார்த்திபராஜா**
உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்.

**முகவுரை**

சாதி என்ற ஒரு கீழ்மையை எனது தாய் நிலமாகிய தமிழ்நாடு எவ்வாறு எதிர்கொண்டு வந்தது என்பதையும் சாதி ஒழிப்புக்கான படிநிலையில் இந்திய மாநிலங்களில் தமிழ்நாட்டை முன்னகர்த்திச் சென்றதில், நவ தமிழகத்தின் உருவாக்கத்தில் பெரும் பங்களிப்பைச் செய்த தந்தை பெரியார் அவர்களை முன்னிறுத்திச் சில கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள விழைகிறேன். மனிதர்கள் வாழும் இந்தப் பூமிப்பந்தில் அமைந்துள்ள நாடுகள் எவற்றிலும் இல்லாத தனித்துவமான அநீதி அடுக்குமுறை - ‘சாதி’ என்பது இந்தியாவில் மட்டுமே இருக்கிறது. இந்திய நிலப்பரப்பில் சாதி என்ற ஒன்று இல்லாத காலம் இருந்தது என்று வரலாற்று ஆய்வாளர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தை அடையாளம் காட்டுகிறார்கள். அது இந்திய நிலப்பரப்புக்குள் ஆரியர்கள் வந்திருக்காத காலம் என்பது அவர்களின் முடிவு.

இந்தியாவுக்குள் வந்த ஆரியர்கள் இங்கே நிலவிவந்த ‘முற்போக்கான’ – தொழில் அடிப்படையிலான சமுதாயப் பிரிவுகளை மேலும் பாகுபடுத்தி, அவற்றை மேல் கீழ் என்று வகைதொகைப்படுத்தி, ஒரு சட்டத் தொகுப்பை உருவாக்கினார்கள். அதற்கு ‘வருணாசிரம தர்மம்’ என்று பெயர். நான்கு வருணமாகவும் அதன் உட்பிரிவுகளாக நாலாயிரத்துக்கும் மேற்பட்ட சாதிகளாகவும் வகுத்திருக்கிறார்கள். இப்படியான தொகுப்பும், அடுக்கும் மிகவும் புத்திசாலித்தனமாக உருவாக்கப்பட்ட ஒன்று. அதைவிட வியப்பளிப்பது, அதை இங்கு நிலவிய மக்களை ஏற்றுக்கொள்ள வைத்தது. பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு இந்த அமைப்பை இந்நிலத்தில் அவர்கள் நிறுவி, அதன் தலைமைபீடத்தில் அவர்கள் அமர்ந்தார்கள்.

ஆரியர்கள் வருகைக்கு முன்பு இந்திய நிலப்பரப்பில் வாழ்ந்தவர்களாக எமது தமிழ்த்தேசிய இனம் இருக்கிறது. தமிழர்களின் வரலாற்று அடையாளங்கள், இலக்கியங்கள் முதலானவை - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையவை – கிடைத்துள்ளன. அவை உருவான காலம் ஆரியம் தமிழ்ச் சமூகத்தில் மெல்ல மெல்ல ஊடுருவத் தொடங்கிய காலமாக இருக்கிறது. எனவே அந்த ஊடுருவலை, தாக்கத்தை மிக எளிதாக அடையாளம் கண்டு, அதற்கு முந்தைய தமிழ்த்தேசிய இனத்தின் சமூக அமைப்பை, பண்பாட்டுக் கட்டமைப்பை மீள்கண்டுபிடிப்புச் செய்ய முடிகிறது. மிக வியப்புக்குரிய செய்தி என்னவென்றால், பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் தன் ஆய்வில்

*கண்டுபிடித்ததைப் போன்ற, தொழில் அடிப்படையிலான பகுப்பைக் கொண்ட ஒரு முற்போக்குச் சமூகமாகத் தமிழ்ச்சமூகம் இருந்தது என்பதுதான். ஆரியம் உள்ளே நுழைந்த, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தில், சாதியக் கட்டுமானத்தை, ஏற்றத்தாழ்வை, மனிதர்களைப் பாகுபடுத்தும் இந்த அநீதிக்கு எதிரான குரல்கள் தமிழ்நாட்டில் வலுவாக ஒலித்திருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகாலமாக இந்த எதிர்ப்புக் குரல் தமிழ்நாட்டில் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கிறது. திருவள்ளுவர், சித்தர்கள், வள்ளலார் என்று ஒரு பெரும் தொடர்ச்சியைத் தமிழ்நாட்டில் காணமுடிகிறது.*

*இந்த மரபை உள்வாங்கி, சாதியக் கட்டுமானத்தைத் தாங்கிப் பிடிக்கிற, அதை நியாயப்படுத்துகிற, அதைக் கட்டிக்காக்கிற பணியை மிகவும் சிறப்பாகச் செய்துவரக்கூடிய 'பிராமணியத்தை' அதன் தலைமை இருப்பைத் தகர்க்கிற முயற்சியைத் தன் வாழ்நாள் கடமையாக எடுத்துக்கொண்டு செயலாற்றியவர் தந்தை பெரியார். 1916 இலேயே 'பிராமணர் அல்லாதா ர் சங்கம்' தந்தை பெரியாருக்கு முன்னால் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது. கல்வி, வேலைவாய்ப்புகளில் 90 சதவிகிதத்துக்கு மேல் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த பிராமணர்களின் இருப்பைத் தகர்த்து, பிராமணர் அல்லாதாருக்குரிய இடத்தை அந்த இயக்கம் கோரியது. அதன் தொடர்ச்சியாக 'ஜஸ்டிஸ் கட்சி' என்ற ஒன்று தொடங்கப்பட்டு, ஆங்கிலேயர்கள் காலத்திலேயே அக்கட்சி மதராஸ் மாகாணத்தில் ஆட்சிபீடத்தில் அமர்ந்தது. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த பிராமண தலைமைத்துவத்தை, சாதிய ஆதிக்கத்தைக் குறித்துக் கேள்வி எழுப்பியே 1925 இல் தந்தை பெரியார் வெளியேறினார். சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். பின்னர் அது 'திராவிடர் கழகம்' என்று பெயர்பெற்றது. பிராமணரின் தலைமையை ஏற்றுள்ள ஆரியர்கள் அல்லாத அனைவரையும் 'திராவிடர்' என்ற அடையாளம் சுட்டுகிறது. அந்த அடிப்படையில் பிராமணர் அல்லாதோருக்கான அரசியலைத் தந்தை பெரியார் முன்னெடுத்தார். தந்தை பெரியாரின் இந்த பண்பாட்டு அரசியல் பணி மிக எளிதாக நடைபெற்றுவிடவில்லை. மிகக் கடுமையான எதிர்ப்புகளையும் தாக்குதல்களையும் அவதூறுகளையும் எதிர்கொண்டார். அவற்றையெல்லாம் தகர்த்து எறிந்து அரசியல், சமூகப் பண்பாட்டுத் தளத்தில் பிராமணியத்தின் தலைமைத்துவத்தைக் தகர்த்து எறிந்தார்.*

*கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உணவகங்களில் 'பிராமணர்கள் சாப்பிடும் இடம்' என்று குறிப்பிட்டுத் தனித்த இடம் இருந்தது. ரயில்களில் பிராமணர்களுக்குத் தனி இருக்கை இருந்தது. கல்வி நிலையங்களில் அவர்கள் அமர்வதற்கென்றே தனித்த இருக்கைகள் இருந்தன. சக மனிதர்களை இழிவுபடுத்தும் இந்த தனியான ஏற்பாட்டைத் தந்தைப் பெரியார் மிகக் கடுமையாக எதிர்த்தார். மிகப்பெரிய போராட்டங்களுக்குப் பிறகு, இவ்வாறு எழுதும் வழக்கம் ஒழிந்தது. இந்தியாவின் பல பகுதிகளில் வழக்கத்தில் இருந்ததைப் போலவே, தமிழ்நாட்டிலும் பெயர்களுக்குப் பின் சாதியைக் குறிப்பிடும் வழக்கம் இருந்தது. வங்காளத்திலும் குடும்பப் பெயராகவும் குலப்பெயராகவும் பின்னொட்டுகள் இடப்படுவதை நானறிவேன். தாகூர், உபாத்தியாய, சட்டர்ஜி, பானர்ஜி, சென் என்பதைப் போன்ற அடைமொழிகள் பெயருக்குப் பின் உண்டல்லவா? இவ்வாறு அடையாளப்படுத்திக்கொள்ளும் வழக்கம் இந்தியா முழுவதிலும் இருக்கிறது.*

*ஆனால், தமிழ்நாடு கடந்த ஐம்பதாண்டுகளில் பெரிதும் பெயருக்குப் பிந்தைய சாதி அடையாள ஒட்டுக்களை உதறித் தள்ளிவிட்டது. ஒரு மனிதனுக்குப் பெருமையும் இழிவும் பிறந்த சாதியால் வருவதில்லை என்று உரத்து முழங்கினார் தந்தை பெரியார். தான் பிறந்த இடைநிலைச் சாதியொன்றி அடையாளத்தை, எல்லோரையும் போலவே*

*ஏந்தியிருந்த பெரியார் (ஈ.வெ.ராமசாமி நாயக்கர்), அந்த அடையாளத்தைத் தான் தூக்கி எறிவதாகவும், தன்னுடைய பெயரைக் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் ஈ.வெ.ராமசாமி என்று மட்டுமே குறிக்குமாறும் அறிவித்தார். இன்று தமிழ்நாட்டில் சாதி ஒட்டோடு ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவது 'இழி செயலாக'க் கருதப்படுகிறது. தமிழ்நாட்டில், கடந்த நூற்றாண்டில் சாதிய அடையாளத்தோடு அறியப்பட்ட ஆளுமைகளின் பெயர்களும்கூட 'சாதி நீக்கம்' செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. வீதிகள், சாலைகள், கட்டிடங்கள் உள்ளிட்ட பொது இடங்களுக்கு வைக்கப்பட்ட ஆளுமைகளின் பெயர்களின் சாதி ஒட்டு நீக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கல்விக்கான பாடங்களில் சாதி அடையாளம் நீக்கப்பட்ட பெயர்கள் இடம்பெறுவதைத் தமிழ்நாடு அரசு உறுதிப்படுத்தியிருக்கிறது.*

*சாதி என்பது மதத்திற்குள் இருக்கிறது. அந்த மதத்தின் அடிப்படையாகக் கடவுள் இருக்கிறது என்பதால் தந்தை பெரியார் இந்த மூன்றையும் (சாதி – மதம் – கடவுள்) கடுமையாக மறுத்தும் எதிர்த்தும் இயங்கினார். சொல்லப்போனால், கடவுளை அழித்தொழிப்பதைத் தன் வாழ்நாள் கடமையாகக் கொண்டு செயலாற்றினார் தந்தை பெரியார். எல்லா மதங்களையும் அவற்றின் மூடச் செயல்பாடுகளையும் எதிர்த்து இயங்கினாலும், பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்துகிற, ஒருவனை உயர்த்தி மற்றொருவனை இழிவுபடுத்துகிற 'வருணாசிரம'த்தைத் தர்மமாக – அடித்தளமாகக் கொண்ட இந்து மதத்தைத் தந்தை பெரியார் மிகக் கடுமையாக எதிர்த்தார்.*

*உலகில் இன்றும் பின்பற்றப்படுகிற மதங்களில், அம்மதத்தைத் தழுவியிருக்கும் எவரும் மதச் சடங்குகளை ஆற்றலாம். அதாவது 'பூசாரி' அல்லது மதகுரு ஆகலாம். ஆனால் இந்து மதத்தில் மதச் சடங்குகளை ஆற்றும் உரிமை 'பிராமணராக'ப் பிறந்தவருக்கு மட்டுமே உண்டு. இந்து மதத்திலேயே அம்பேத்கர் நீடிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்த சாவர்க்கரிடம், 'ஒரு தலித்தை பூரி சங்கராச்சாரியாராக ஆக்குங்கள்; பிராமண சங்கராச்சாரியாருக்குத் தும் அத்தனை மரியாதையையும் அவருக்கு அளியுங்கள்; நான் இந்து மதத்திலேயே இருந்துவிடுகிறேன்' என்று குறிப்பிட்டார் அம்பேத்கர். அன்றைக்குப் போனவர்கள், அம்பேத்கர் இறந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும் திரும்பி வரவில்லை.*

*கோயில்களையும் அக்கோவில்களில் உள்ள கடவுளையும் மறுத்தவர்தான் தந்தை பெரியார். ஆனால், அவர் தாழ்த்தப்பட்டவர்களின் கோயில் நுழைவு உரிமைக்காகப் போராடினார். கோயிலுக்குள் அல்ல, கோயில் இருக்கும் தெருவிலேயே தாழ்த்தப்பட்டவர்கள் நடமாடக்கூடாது என்று இருந்த தடையை நீக்குவதற்காகக் கேரள மாநிலம் 'வைக்கம்' என்னும் ஊரில் பெரும் போராட்டத்தை முன்னெடுத்து அக்கோரிக்கையை வென்றுகாட்டியவர் தந்தை பெரியார்.*

*இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் செயல்பாடுகளில் ஒன்றாக அரிசன சேவையையும் கோவில் நுழைவையும் வலியுறுத்திய காந்தியடிகளின் காலத்திலேயே அது தோற்கடிக்கப்பட்டதை வரலாறு காட்டுகிறது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் தாழ்த்தப்பட்டோரின் கோயில்நுழைவைப் பெரிதும் சாதித்துக்காட்டியவர் பெரியார்.*

*அந்த நன்றியுணர்ச்சியின் அடையாளமாகத்தான் தமிழ்நாட்டின் பெரும் கோயில்களின் வானுயர்ந்த ராஜ கோபுரங்களுக்கு முன் வீதியில் சிலையாக நின்றிருக்கிறார் தந்தை பெரியார். அவருடைய சிலைக்குக் கீழே அவருடைய புகழ்பெற்ற கடவுள் மறுப்பு வாசகங்கள் - கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; கடவுளை வணங்குகிறவன்*

*காட்டுமிராண்டி; கடவுளைப் பரப்புபவன் அயோக்கியன்' – என்ற புகழ்பெற்ற வாசகங்கள் இடம்பெற்றிருக்கின்றன.*

*அயோத்தியில் ராமர் கோயிலில் சிலை பிரதிஷ்டை விழாவுக்கு முன் இந்தியாவின் புனிதத் தலங்களில் படியேறி இறங்கிய இந்தியப் பிரதமர் மோடி அவர்கள், தமிழ்நாட்டின் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு வந்திருந்தார். தந்தை பெரியாரின் சிலையைக் கடந்து, அவருடைய கடவுள் மறுப்பு வாசகங்களைக் கடந்துதான் அவர் அக்கோயிலுக்குள் நுழைய முடிந்தது.*

*தீட்டு, புனிதம் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் எறியப்படும் கல், இச்சமூகத்தின் அநீதியான கட்டமைப்பின்மீது எறியப்படுகிற கல் என்ற புரிதல் தந்தை பெரியாருக்கு இருந்தது என்றே சொல்ல வேண்டும். அந்த அடிப்படையிலேயே மதச் சடங்குகளை ஆற்றும் உரிமையை ஏகபோகமாக பலநூறாண்டுகளாக அனுபவித்து வந்த பிராமணர்களின் ஆதிக்கத்தைத் தகர்க்கும் வகையில், 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும்' என்று முழங்கினார் பெரியார்.*

*1970 களில் தமிழ்நாட்டின் சட்டப்பேரவையில் 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்பது சட்ட வடிவம் பெற்றது. சமயச் சடங்குகளை ஆற்றுவதற்கான பயிற்சிகளைப் பெற்று ஒரு தலைமுறை இப்போது கோயில்களில் நுழைந்திருக்கும் அதிசயம் தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது. இந்த அதிசயத்தைச் சாத்தியப்படுத்தியவர் தந்தை பெரியார்.*

*இந்திய அரசியல் சட்டம் இந்திய மக்கள் அனைவரும் சமம் என்று சொல்கிறது. ஆனால் வருணாசிரமச் சட்டம் – ஆகமச் சட்டம் அனைவரும் சமம் இல்லை என்கிறது. இந்திய அரசியல் சட்டத்தின் பிற்போக்குத் தனங்களைத் திருத்திச் சமூக நீதியை, சம தருமத்தை நிலைநாட்டுவது அவசியம் என்று தந்தை பெரியார் கருதினார். இந்திய அரசியல் சட்டம் சுதந்திர இந்தியாவில் நடைமுறைக்கு வந்த பிறகு, அதில் மேற்கொள்ளப்பட்ட முதல் திருத்தத்திற்குக் காரணமாக அமைந்தவர் தந்தை பெரியார்.*

*சாதி ஏன் இன்னும் சாகவில்லை என்ற வினாவையெழுப்பி ஆய்வு செய்த பாபாசாகேப் அம்பேத்கர், சாதி காப்பாற்றப்பட்டு வருவதற்கான அடிப்படைகளில் ஒன்றாக 'அகமண முறை'யைச் சுட்டிக்காட்டுகிறார். சாதிக்குள் மட்டுமே பெண்ணெடுத்து – பெண் கொடுக்கும் அகமண முறையை அழித்தொழிக்காமல் சாதியை அழித்தொழிக்க முடியாது என்பது அம்பேத்கரின் கருத்து.*

*அம்பேத்கரின் இக்கண்டுபிடிப்பைச் சாத்தியப்படுத்துவதற்கான நடைமுறையை ஒரு இயக்கமாக முன்னெடுத்தவர் தந்தை பெரியார். சாதி மீறிய திருமணங்கள், 'கலப்பு மணம்' என்று சொல்லப்பட்டபோது, 'ஒரு மனுஷனும் ஒரு மனுஷியும்தானே கல்யாணம் செய்துகொள்கிறார்கள்? ஒரு மனுஷனும் விலங்கும் திருமணம் செய்துகொள்வதைப் போல 'கலப்பு மணம்' என்று ஏன் குறிப்பிட வேண்டும்? இதைச் 'சாதி மறுப்புத் திருமணம்' என்று குறிப்பிட வேண்டும் என்றவர் பெரியார்.*

*பிராமணரால் செய்யப்படும் சடங்குகள், மந்திரங்கள், தாலி முதலானவை இல்லாமல் செய்யப்படும் 'சுயமரியாதைத் திருமணங்கள்' அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத நிலை தமிழ்நாட்டில் இருந்தது. சுயமரியாதைத் திருமணங்களை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்று தொடர்ந்து குரல் எழுப்பி வந்தார் தந்தை பெரியார். பெரியாரின் சீடரான அறிஞர் அண்ணா, 1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, அவர் இட்ட முதல் கையெழுத்து 'சுயமரியாதைத் திருமண*

*அங்கீகாரம்' பற்றியது. கோப்பில் கையெழுத்து இட்ட அறிஞர் அண்ணா, 'தந்தை பெரியாரின் இதயத்தில் முள் தைத்திருந்தது. இந்தச் சட்ட ஏற்பின் மூலம் அந்த முள்ளை அகற்றியிருக்கிறோம்' என்று சொன்னார்.*

*சாதி மறுப்புத் திருமணங்களை பேரியக்கமாகவே முன்னெடுத்தவர் தந்தை பெரியார். திருமணச் சடங்குகளில் இருந்த பெண்ணடிமை, பெண் இழிவு அடையாளங்களைத் துடைத்தெறிந்தவர் தந்தை பெரியார்.*

*கல்வியே பெண்களை விடுதலை செய்யும் ஆயுதம் என்றார் பெரியார். 'பெண்களின் கைகளில் திணிக்கப்பட்டிருக்கும் சமயலறைக் கரண்டிகளைப் பிடுங்கிவிட்டுப் புத்தகங்களைக் கொடுங்கள்' என்று சொன்னார் அவர். இந்திய மாநிலங்களில் பெண்கல்வியில் உச்சத்தைத் தொட்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இப்பெருமைக்குப் படிக்கல்லாய் அமைந்தவர் பெரியார்.*

*தந்தை பெரியாரின் சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளும் செயல்பாடுகளும் அவற்றை உள்வாங்கிய தமிழ்நாட்டு அரசியல், பண்பாட்டுச் சூழல்களும் இந்தியாவில் தனித்துவமானவை.*

*தொழிலாளர் உரிமை என்ற அம்சத்தில் மேற்கு வங்கம் எவ்வாறு இந்தியாவுக்கே வழிகாட்டுகிறதோ, அதேபோல சமூக நீதி என்பதற்கும் சமத்துவம் என்பதற்கும் தமிழ்நாடு வழிகாட்டியாக இருக்கமுடியும்.*

*சாதி என்பது வெட்ட வெட்ட வளரும் விஷச்செடி. அதன் ஆணிவேரை அகற்றாமல் அதனை அகற்ற முடியாது என்பது தமிழ்நாட்டின் அனுபவம். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகால தமிழ்நாட்டின் சாதி ஒழிப்புக் குரலின் தொடர்ச்சியாய், கடந்த நூறாண்டுக்கால சாதியொழிப்புக் களத்தில் கிளைகளை மட்டுமே வெட்டிக் கொண்டிருக்கிறோம் என்பது சுயவிமர்சனமாகப் பகிர்ந்துகொள்ளத் தோன்றுகிறது.*

*ஆனால், மதச் சார்பின்மை, மத சகிப்புத்தன்மை ஆகியவற்றில் தமிழ்நாடு முன்னகர்ந்தே இருக்கிறது. மதவாத அரசியல் என்பதற்கான பொது ஏற்பு இன்னும் தமிழ்நாட்டில் நடக்கவில்லை. சாதியவாதிகள், மதவாதிகள், பிற்போக்குவாதிகளின் கண்களில் விழுந்த மணல் துகளாய் தமிழ்நாடு உறுத்திக்கொண்டே இருக்கிறது. தொண்டையில் சிக்கிய மீன் முள்ளாய் விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் மதவாத அரசியல் விழிபிதுங்கி நிற்கிறது.*

**முடிவுரை**

*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்ச்சமூகம் போற்றி வருகிற பல முற்போக்கான அம்சங்களை கபளீகரம் செய்வதற்கான பெருமுயற்சிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்தக் கருத்தியல் போரில் தமிழினத்தில் கரங்களில் எதிரிகளை அச்சுறுத்தும், வீழ்த்தும் ஆயுதமாகத் தந்தை பெரியார் எப்போதும் இருப்பார்.*